IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# அகப்பாடல்களில் குறியீடுகள்

**Praba Guna**

முன்னுரை

சங்க இலக்கிய அகப்பாடல்களில் மாந்தர்களின் நுண்மையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அகம் பற்றிய பாடலாகையால் அதனைப் பண்பாடு குறைவுபடாமல் உணர்த்தும் பொறுப்பு புலவர்க்கு இருந்திருக்கின்றது. எனவே அகப்பாடல்களைப் பாடிய புலவர்கள் குறிப்பாகப் பொருளுணர்த்தும் குறியீடுகளைப் பயன்படுத்தினர் எனலாம். குறியீடுகளாக விளங்கும் கருப்பொருள்கள் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் அதே குறியீட்டுப் பொருளை ஏற்பதற்கு மனித உணர்வுகளோடு ஒத்திருத்தல் ஆகியன காரணமாகின்றன. அகத்திணைப் புலவர்கள் அனைத்து நிலைகளிலிருந்து குறியீடுகளைக் கண்டு வெளிப்படுத்தியுள்ளனர்.

**புணர்ச்சிக்குறியீடு**

ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் புணர்ந்த்தனை சங்கப் புலவர்கள் குறியீடாக்கியிருக்கின்றனர். இது களவுப் புணர்ச்சிக் குறியீடு, கற்புப் புணர்ச்சிக் குறியீடு என்று இரு வகையாகப் பிரிக்கின்றது.

**களவுப் புணர்ச்சிக் குறியீடு**

தலைவனும் தலைவியும் பிறர் கொடுப்பவும் அடுப்பவுமின்றி தாமே எதிர்பட்டுக் கூடுவது களவு ஆகும். இவ்விருவரும் எதிர்பட்ட வேலையில் வேட்கை மிகுதியால் புணர்வது களவுப் புணர்ச்சியாகும். இவற்றைச் சுட்ட உரலை உலக்கைக் கொண்டு இடித்தல், ஊஞ்சலாடுதல் ஆகியவை குறியீடுகளாக்கப்பட்டன.

**குரங்கு-பலா-தலைவன் தலைவி**

வாழை, பலா கனிந்து விழுந்து உண்டாகிய தேறல் பாறைச் சுனையில் தேங்கியிருக்க, அதனைக் கண்ட கடுவன் உண்டு மகிழ்ந்து சந்தன மரங்களில் ஏற மாட்டாது மயங்கி உறங்கும் காட்சியைக் கூறி வரைவு கடாவுகிறாள் தோழி. இங்கு தலைவனைச் சுட்டும் குறியீடாய் அமைந்துள்ளது.

களவுக் காலத்தில் காப்பு மிகுதியின் காரணமாக பகல்குறி வரும் தலைவனை இரவில் வரும்படி கூறுகிறாள் தோழி. இரவுக்குறி ஏதம் மிக்கதாயினும் அதனை வெல்லும் வலிமை தலைவனுக்கு இருக்கிறது என்பதை யானையின் வாயிலாகக் காட்டுகிறாள்.

“பனைத்திர என்ன பரேரெறுழ்த் தடக்கைக்
கொலச்சினந் தவிஉர மதனுடை முன்பின்”

**வெறியாட்டு**

தினைப்புனக் காவலுக்குச் சென்று காதலில் வீழ்ந்த உடற்கூறுகளில் தலைவனின் உறவாலும் பிரிவாலும் வேறுபடுகள் தோன்றும். இவற்றைக் கூர்ந்து ஆராயும் தாய் முதலியோர் கட்டுவிச்சியிடம் குறி கேட்பர். அவள் தெய்வம் அணங்கியது என்பாள். வெறியாடும் வேலனை அழைத்து முருகனுக்குத் தினைக்கதிர் படைத்து மாலை சூட்டி மதியறுத்துப் பலிகொடுத்து துயர்தீர்க்க முயல்வர். இச்செயல் வெறியாட்டெடுத்தல் எனப்படும். வெறியாட்டு என்ற சமயஞ்சார்ந்த சடங்கு சிறந்த அகத்திணை குறியீடாக சங்க இலக்கியத்தில் இடம் பெறுதலை அறிய முடிகின்றது.

“தோளும் தொல்கவின் தொலைந்தன நாளும்

அன்னையும் அருந்துயர் உற்றனர் அலரே”

பாண்டியன் நெடுஞ்செழியன் எழுவரை வென்ற ஆலங்கானத்து ஆர்ப்பினும் பெரியது என்று தலைவியின் பால் உண்டான அலரை இவ்வாறு கல்லாடனார் குறிப்பிடுகிறார்.

**அலர் நீக்குதல்**

“முழங்குதிரைக் கொழீஇய மூரி

தடந்தாள் தாழைஒ முள்ளுடை நெடுந்தோட்டு”

புலவு நாற்றத்தை மலர் மணம் போக்குதல் என்பது அலர் நீங்க வரிந்து கொள்ளுதலை உணர்த்தும் குறியீடாகும். களவொழுக்கத் தலைவன் வரைவு நீட்டித்தலால் ஊரில் எழுந்த அலரைக் கூறி தோழி வரைவு கடாவுகிறாள்.

**உடன்போக்கு**

களவு மேற்கொண்ட காதலர்களின் மறைவொழுக்கம் வெளிப்பட்டு அலராகும் போது தலைவன் தலைவியை ஒருவருக்கும் தெரியாமல் தன் மனைக்கு அழைத்துச் செல்கிறான். இந்நிலையில் தலைவியின் மனநிலையை வெளிப்படுத்தும் குறியீடுகளாக நெல்லி, வேம்பு, இருப்பை ஆகிய பழங்கள் காட்டப்பட்டுள்ளன.

"தானே இருக்க தன்மனை யானே

நெல்லி தின்ற முள்ளெயிறு தயங்க

உணலாய்ந் நிசினா லவரொடு சேய்நாட்டு"

மேற்கண்ட பாடல், தலைவிக்கு ஏற்பட்ட உடல் வேறுபாட்டை அறிந்த செவிலி வெறியாட்டெடுக்கிறாள்.

"சிறுகுள கருந்து தாய்முலை பெறாஅ

மறிகொலைப் படுத்தல் வேண்டி வெறிபுரி"

தலைவனுடன் கொண்ட நட்பை அறியாத அன்னை வேலனைக் கொண்டு வெறியெடுக்கத் தயாராகிறாள். இதனைத் தலைவனுக்கு தோழி ஆட்டுக்குட்டியின் மூலம் குறிப்பாகத் தெரிவிக்கிறாள்.

**அலருக்கான குறியீடுகள்**

தலைவன் தலைவியரின் களவு வாழ்க்கை ஊரார் அறிய வெளிப்படுவது அலராகும். இவ்வலருக்கான குறியீடுகள் அலர் பரவுதல், அலர் நீக்குதல் என்று இருவகையாகப் பிரிக்கப்பட்டு விளக்கப்படுகிறது.

போர் ஆரவாரம், கனியின் மனம் பரவுதல் போன்றவை அலர் பரவியதற்கான குறியீடுகள் ஆகும். புலவு நாற்றத்தை மலர் மணம் போக்குதல் அலர் நீக்கியதற்கான குறியீடுகளாகும்.

**அலர் பரவுதல்**

தலைவன் தலைவி களவுச் செய்தி ஊர் பெண்டிர் காதோடு பேசிக் கொள்வது தலைவி மனதை வருத்தும். ஊர் மகளிர் தூற்றும் பழியுரை தலைவிக்கும் தோழிக்கும் கடலோசையினும் பெரியதாயும் அருவி ஒலி ஆரவாரமிக்கதாயினும் தோன்றும். அலரை உணர்த்தப் பூவின் மணம், கனியின் மணம், ஊனின் நாற்றம் போரின் ஆரவாரம் ஆகியவற்றைக் குறியீடாகி இருக்கின்றனர்.

தலைவி உறவுகளைப் பிரிகையில் வருந்தி தலைவனுடன் புது உறவடையும் போது மகிழ்கிறாள். இது உடன் போகிய தலைவி பெறும் இன்பத்திற்குக் குறியீடாக நெல்லிக்காய் வந்துள்ளது.

**வரைவு**

களவு நீண்டு போகும் காலத்து தலைவியை மணம் பேச வேற்றார் வரும் போது அதனை விலக்கித் தலைவன் அவளை வரைய வேண்டும் என உணர்த்த வரும் தோழி, அதற்குப் புலியோடு மாறுபடும் பன்றியின் செயல்களைக் கொண்டு குறியீடாடக்குகிறாள்.

"சிறுகட் பன்றிப் பெருஞ்சின ஒருத்தலொடு

குறுங்கை இரும்புலி பொரூஉம் நாட"

பன்றி புலியோடு போருடற்கு இடனான மலைநாட்டுத் தலைவனே என்று கூறுவதிலிருந்து புலி வேற்று வரைவையும் பன்றி தலைவனையும் சுட்டும் குறியீடாகும் என்பதைப் பெற முடியும். தலைவனுடன் உடன்போக நினைத்த தலைவி தானே தன் காற்சிலம்பினைக் கழிதலை கயமனார் குறிப்பிடுகிறார்.

"வைகுபுலர் விடியல் மெய்க்கரந்து தங்கா

லரியாமை சிலம்பு கழீ இப் பன்மான்"

அக இலக்கியத்தில் சிலம்பு கழீஇ நோன்பு என்ற சடங்கு உணர்வு நிலைகளைத் தூண்டும் குறியீடாக விளகுவதைத் தெளியலாம்.

"முல்லையொடு காழுங்க் கண்ணியும் மெல்லியால்

கூந்தலும் பெய்து முடித்தேன் மன்தோழியாய்"

குறியிடத்தில் தலைவியின் தலையில் தலைவன் சுட்டிய பூ அன்னை முன் விழ அவள் நெருப்புக் கை தொட்டவள் போல் விதிர்த்ததைத் தலைவி கூற, தோழி அஞ்சாதே வதுவை நிகாவுள்ளதென நற்செய்தியுரைத்தலை இப்பாடல் காட்டுகிறது.

**வதுவைச் சடங்கு**

வதுவை என்ற சொல் திருமணத்தைக் குறிக்கும் சொல்லாகும். திருமணச் சடங்கில் நீராட்டுதல் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இதனை அகநானூற்றின் 86,136 ஆகிய பாடல்கள் விரிவாக உரைக்கின்றன.

"உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்

பொதுசெய் கம்பலை முது பெண்டிர்"

தலையில் நிறை குடத்தையும் கைகளில் அகன்ற மண்டையென்னும் கலத்தையும் உடைய புதுசெம் பெண்டிர் அவற்றை முறைப்படி கொடுக்க புதல்வரைப் பெற்ற மங்கல மகளிர் நால்வர் கூடி நின்று உன்னை மனைவியாகப் பற்ற நின் கணவனை நீ பெரிதும் விரும்புகின்றவள் ஆகுக என்று வாழ்த்தி நீரொடு கூட்டிப் பெய்த மலரும் நெல்லும் கூந்தலில் தனி விளங்கத் தலைவிக்கு நீராட்டுச் செய்யும் வதுவையை நல்லூர்க்கிழார் வருணிக்கிறார்.

**கற்பு புணர்ச்சிக் குறியீடு**

களவில் கூடி இன்புற்ற காதலர்கள் எல்லோரும் அறியத் திருமணம் புரிந்து கொண்டு வாழ்வது கற்பு ஆகும். இக்காலத் தலைவன் தலைவியின் புணர்ச்சி கற்புப்புணர்ச்சி எனப்படும்.

இக்கற்புப் புணர்ச்சியைக் சுட்ட மண்ணில் மழை பெய்தல், உண்ணுதல், நிலத்தை உழுதல், உலக்கைக் கொண்டு இடித்தல் ஆகியவை குறியீடாக்கப்பட்டிருப்பதை இங்கே காணலாம்.

**விலங்கு கனியை உண்ணுதல்**

மாமரம் மருத நிலத்திலே மிகுந்து செழித்து வளரக் கூடியது. அகப்பாடல்களில் ஊடலுக்குக் காரணமாகும் பரத்தையின் காமத்தை உரைக்கும் குறியீடாகப் பெரிதும் ஆளப்படுகிறது.

"கழனி மாத்து விளைந்து தீம்பழம்

பழன வாளை கதூஉ மூரண்"

என்று பரத்தை தலைவனை அடையாளப்படுத்துகிறார். மாங்கனி விளைந்து கனிந்து நீர் தேங்கிய வயலுள் வீழ்ந்ததால் வாளைக்கு கிடைத்தது என்பது பாடலின் பொருள். இதில் மாங்கனி தலைவனையும் வாளை பரத்தையையும் சுட்டும் குறியீடுகளாகின்றன.

**தொன்மம்**

தொன்மங்கள் தனி ஒருவரால் படைக்கப்படுவன அல்ல. மக்களிடையே வழங்கி வழங்கி உருப்பெறுவன. இது பலவகை வேறுபட்ட கதைகளாக மாற்றி மாற்றிச் சொல்லப்படும். இடம்விட்டு இடம் பெயர்ந்து பல மாறுதல்களோடு கூறப்படும் ஒன்றாகும் என்று தமிழண்ணல் அவர்கள் சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம் என்னும் நூலில் குறிப்பிடுகிறார். நம் நாட்டில் தொன்று தொட்டு நிலவிவரும் தொன்மை வளமும் அத்தொன்மை மாந்தர்களும் நிகழ்வுகளும் மக்கள் உணர்விலும் வாழ்க்கையிலும் ஆழ்ந்த உறவு கொண்டிருப்பதால் புலவர்களின் கருத்து வெளியீட்டிற்குத் தொன்மங்கள் சரியான கருவியாகப் பயன்பட்டன.

**முடிவுரை**

புணர்ச்சியை உணர்த்த விலங்குகள், பறவைகள், கனி உண்ணல், ஊசல், ஏர் உழுதல், பன்றி நிலம் தோண்டுதல், ஊசல் ஆடுதல், உரலை உலக்கைக் கொண்டு இடித்தல் ஆகியன குறியீடாக்கப்பட்டுள்ளன. யானை பிளிறல், போர் ஆரவாரம், மலர் மணம் பரப்புதல் போன்றவை அலர் பரவுதலுக்கு காட்டப்படுகின்றன. பிரிவினை உணர்த்த பசு, தேரை ஆகியவற்றின் செயல்கள் குறியீடாக்கப்பட்டுள்ளன. தலைவன் தலைவியின் பண்பு நிலைகளைக் காட்ட மலை, அருவி பூக்கள் போன்றவற்றினையும், முரண்பட்ட கருத்துகளைத் தெரிவிக்க இருளும் ஒளியும், கையுறை ஏற்றலும், மறுத்தலும் ஆகியன குறியீடுகளாக காட்டப்படுகின்றன.